எடுக்க வேண்டும். இதுபோன்று நிறைய மாமன்ற உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள்; இதுபோன்ற இடங்களில் எப்படிச் செய்யலாம் என்று மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் கலந்து பேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும்.

துறை ரீதியாக என்ன சொல்கிறார்களென்றால், சட்ட விதிமுறைகளின்படி 150 கார்டுகள் இருக்க வேண்டும்; 500 கார்டுகள் இருக்க வேண்டும்; 800 கார்டுகள் இருக்க வேண்டும்; நகரப் பகுதியாக இருந்தால் 1,000 கார்டுகள் இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆகவே, இதற்கு விதிவிலக்கு அளித்து, இதுபோன்ற கடைகளைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பது குறித்து நானும், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசவிருக்கிறோம். அந்தச் சந்திப்பு முடிந்த பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்கின்ற நல்ல முடிவை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு நிச்சயமாக எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

18—

புதிய மின்மாற்றி

***47337—திரு. சிவ.வீ. மெய்யநாதன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, கத்தக்குறிச்சி ஊராட்சி, கண்ணியாப்பட்டியில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2020 ஜனவரி 9]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கத்தக்குறிச்சி ஊராட்சியில் 110/22 துணை மின் நிலையத்திலிருந்து போதிய அளவிற்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதியில் மூன்று மின்மாற்றிகள் உள்ளன. மின் பளுவும் குறைவாகத்தான் இருக்கின்றது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற பகுதி 11 கி.மீ. தூரத்தில் இருக்கின்ற காரணத்தினால், அவர் கோரியபடி, புதிதாக ஒரு 63 KVA மின்மாற்றி அமைக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.*

திரு. சிவ. வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கத்தக்குறிச்சி ஊராட்சி, கண்ணியாப்பட்டியில் புதிய மின்மாற்றி அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றேன். அதோடுமட்டுமல்ல, கைக்குறிச்சி ஊராட்சியைச் சேர்ந்த கூடலூர், முள்ளங்குறிச்சி பகுதிகள்* remote villages *ஆக உள்ளன. இந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் செல்லாததால் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அந்தப் பகுதியிலும் ஒரு புதிய மின்மாற்றி அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்வதோடு, ஆலங்குடி தொகுதியின் மேற்குப் பகுதியான வல்லத்திராக்கோட்டை, வெண்ணவால்குடி, கொத்தக்கோட்டை, திருவரங்குளம் உள்ளிட்ட 20–க்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் சீரான மின்சாரம் கிடைக்காத காரணத்தால் விவசாயிகள், வணிகர்கள், படிக்கின்ற மாணவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. இதனைக் கருத்தில்கொண்டு அந்தப் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென இதே அவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்திருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இடத்தைத் தேர்வு செய்து கொடுத்தால், அந்த இடத்திலே துணை மின் நிலையம் அமைக்கும் பணியை நிறைவேற்றித் தருவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். குறிப்பாக, இன்றைக்கு வம்பன் பகுதியிலே தோட்டக்கலைத் துறைக்குச் சொந்தமான 4*

ஏக்கர் இடத்தை மின் வாரியத்திற்கு ஒப்படைத்திருக்கின்றோம். அப்பகுதி மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, வம்பன் பகுதியில் விரைவில் 110/22 KV துணை மின் நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, டெல்டா மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மின்னழுத்தம் குறைவாக இருக்கிறது. அதிக தூரம் இருக்கின்ற காரணத்தினால்தான் மின் தடை ஏற்படுகிறது. அதற்காகத்தான் நாங்கள் அந்தந்தப் பகுதிகளில் அதிகப் பளு உள்ள மின்மாற்றிகளை அமைக்க ஏற்பாடு செய்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதியில் தோட்டக்கலைத் துறைக்குச் சொந்தமான 4 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டிருப்பதாக இப்போது சொல்லியிருக்கிறார்கள். இடம் வழங்கப்பட்டு, எங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தால், அதிகாரிகளுடன் அதுகுறித்து ஆய்வு செய்து, துணை மின் நிலையம் அமைத்தாக வேண்டும். ஏனெனில், அந்தப் பகுதி முழுவதும் விவசாயப் பகுதியாக இருக்கின்ற காரணத்தால், மின் பளு குறைவாக இருக்கின்ற காரணத்தால் விவசாய மின் மோட்டார்களுக்கு பழுது ஏற்படுகிறது என்ற புகார்களெல்லாம் வந்திருக்கின்றன. எனவே, அதனை ஆய்வு செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.*

திரு. சிவ. வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குடியில் மின்சார வாரியத்தின் சார்பாக புதிய கோட்ட அலுவலகம் அமைக்கப்பட்டது. அந்தப் புதிய கோட்ட அலுவலகத்திற்கு இதுவரை புதிய கட்டடம் கட்டித் தரப்படாத காரணத்தால், அங்கிருக்கின்ற அலுவலகம் பாச்சிக்கோட்டையிலே ஒரு remote பகுதியிலே இயங்குகிறது. அங்கு internet வசதி சரியாகக் கிடைக்காததால், பயனாளிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆலங்குடி நகரப் பகுதியிலேயே வேளாண்மைத் துறைக்குச்*

2020 ஜனவரி 9]

சொந்தமான கட்டடங்கள் காலியாக இருக்கின்றன. அந்தக் கட்டடங்களில் மின்வாரிய கோட்ட அலுவலகம் இயங்குவதற்கு வழிவகை செய்வதோடு, ஆலங்குடியில் மின் வாரிய கோட்ட அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய கட்டடம் கட்ட வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அவர் சொல்கின்ற பகுதியில் அதற்கான இடம் இருக்கின்றதா என்று தெரியவில்லை. ஆனால், அதற்குண்டான இடம் மின்சார வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டிருப்பின், வருகின்ற நிதியாண்டிலேயே கட்டடம் கட்டுவதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும்.*

மற்றொன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே பழைய கட்டடங்கள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார். அவை அரசு கட்டடங்களா அல்லது தனியார் கட்டடங்களா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வாரேயானால், அதுவும் ஆய்வு செய்யப்படும். தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் அலுவலகத்திற்கு வேறு இடத்தில் கட்டடம் இருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். அது தனியார் கட்டடமா அல்லது அரசு கட்டடமா என்பதைச் சொன்னால், அதுவும் பரிசீலிக்கப்படும். மின்சார வாரியத்திடம் இடம் ஒப்படைக்கப்பட்டிருந்தால் வருகின்ற நிதியாண்டிலேயே SE Office *கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. ப. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். என்னுடைய வேலூர் தொகுதியில் சித்திரை மாதம் புஷ்ப பல்லக்கு அமைக்கப்படும். வேலூர் மாநகரம்* Smart City *ஆகியிருக்கிறது. எனவே,* CMC road, *தோட்டப்பாளையம், மண்டித் தெரு, காந்தி ரோடு, மூங்கில் மண்டித் தெரு,* Officers Line, *அண்ணா சாலை ஆகிய பகுதிகளில்* cables-*ஐ எல்லாம்* underground cables *ஆக அமைத்துக்கொடுத்தால் சிறப்பாக இருக்கும். ஏனென்றால்,*

smart city ஆக வந்திருக்கின்ற காரணத்தால், மின்சார வாரிய staff-ஐ வைத்து, L&T போன்ற தனியார் நிறுவனத்திற்கு contract கொடுத்து செய்தால் சிறப்பாக இருக்கும். ஏனெனில், சித்ரா பௌர்ணமி அன்று இரவு 10 மணிக்கு மின் supply-ஐ off செய்தார்களென்றால், காலை 7, 8 மணி வரை மின் supply இருப்பதில்லை. அந்தப் பகுதியில் CMC மருத்துவமனை இருக்கிறது. பொது மக்களும் வாழ்கிறார்கள். தற்போது Smart City ஆக வந்திருக்கிற காரணத்தாலும், மாநகராட்சியாக இருக்கின்ற காரணத்தாலும் underground cables-ஐ அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, இது மாநகராட்சிகளில் செய்ய வேண்டிய பணிதான். படிப்படியாக மாநகராட்சிகளில் underground cables போடப்பட்டுக்கொண்டிருக்கின்றன. தற்போது Smart City ஆக வருகின்ற காரணத்தினால் உள்ளாட்சித் துறை அதற்குண்டான நிதியை ஒதுக்குவார்கள் என்று சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். ஏனென்றால், Smart City Mission-ல் அந்தத்திட்டம்இருக்கின்றது. அந்தத்திட்டத்திற்குண்டான நிதியை ஒதுக்குகின்றபோது மின்சார வாரியத்திற்கும் கொஞ்சம் கடன் சுமை குறையும். அதனால் உள்ளாட்சித் துறையோடு நாங்கள் பேசுகின்றோம். இல்லையென்றாலும்கூட, பொதுவாக கார்ப்பரேஷன் பகுதிகளில் படிப்படியாக U.G. cables-ஐக் கொண்டு வருவதுதான் அரசினுடைய திட்டம். அந்தத் திட்டத்தைப்பற்றி அரசு அதிகாரிகளோடு ஆய்வு செய்து உள்ளாட்சித் துறை அதற்குத் தயாராக இருக்கிறதென்றால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். இல்லையென்றால் படிப்படியாக உங்களுடைய வேலூர் மாநகராட்சிக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு, மாண்புமிகு நகராட்சி